# நாடி

Pulse of the Singapore Muslim Community

*நாடி 10 ஹிஜ்ரி 1431 சபர் பிப்ரவரி 2010* இலவசம்

# புத்தாண்டுக்குப் பொலிவு சேர்த்த பட்டதாரிகள் வரவேற்போம்! வாழ்த்துவோம்!



# கடையநல்லூர் முஸ்லிம் லீகின் முன்னுதாரணச் சாதனை

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்கள் தாய் மொழியில் மார்க்கக் கல்வி பயின்று பட்டம் பெற வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலை தான் இருந்து வந்தது. காலத்தின் தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் நமது குடியரசிலேயே தமிழ், ஆங்கில மொழிகளில் இஸ்லாமியக் கல்வித் தேர்ச்சி பெற்று பட்டதாரியாகும் அரிய வாய்ப்பு உருவாகியிருக்கிறது. சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அந்த முன்னோடிப் பணியில் முனைந்து 42 சிங்கப்பூரர்களுக்கு மார்க்க அறிஞர் பட்டத்தை வழங்கியிருக்கிறது.

இச்சங்கம் ஐந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் கடையநல்லூரில் இயங்கிவரும் ஃபைஸுல் அன்வார் அரபிக் கல்லூரியுடன் இணைந்து பாடத் திட்டங்களை வகுத்து, வகுப்புகளை நடத்தத் தொடங்கியது. அதற்கென உஸ்தாத் முஹம்மது முஹைதீன் ஃபைஸி 2001-ல் அழைக்கப்பட்டார். அவரும் உஸ்தாத் காரி ஹாமீம் உஸ்மான் ஃபைஸியும் மார்க்கக் கல்வி வகுப்புகளை நடத்தினர். ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிக்கப்பட்டதால் இந்தியர் அல்லாத மற்ற மொழி இஸ்லாமியர்களும் பதிவு செய்துகொண்டு பட்டக் கல்வி பயின்றனர்.

## பட்டதாரிகள்

சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் 2.1.2010 அன்று நடைபெற்ற ஹிஜ்ரி 1431 புத்தாண்டு முஹர்ரம் நினைவு விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக பட்டமளிப்பு விழா அமைந்தது. கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர்கனி தமது அறிமுக உரையில் பட்டக் கல்வித் திட்டத்தின் பின்னணிகளை விரிவாக எடுத்துரைத்தார்.

ஐந்து ஆண்டு மார்க்கக் கல்வியை நிறைவு செய்த 42 பேருக்கும் சிறப்பு விருந்தினராக வருகையளித்த கல்வி, உள்துறை அமைச்சுகளுக்கான




மூத்த நாடாளுமன்றச் செயலாளர் ஹாஜி மசகோஸ் ஜுல்கிஃப்லி பட்டங்களை வழங்கினார்.

20 வயதுக்கும் 70 வயதுக்கும் இடைப்பட்ட அவர்களில் 22 பேர் ஆண்கள். மகளிர் 20 பேர். இந்தப் பட்டதாரி அணியில் 30 இந்திய முஸ்லிம்களும் 10 மலாய் சமூகத்தினரும் 2 அரேபியர்களும் அடங்குவர்.

## சிறப்பு விருந்தினரின் நல்லுரை

சிறப்பு விருந்தினர் ஹாஜி மசகோஸ் ஜுல்கிஃப்லி கடையநல்லூர் முஸ்லிம் லீகின் மார்க்க உயர் கல்விப் பணியை மனமுவந்து பாராட்டினார். தமது உரையில் பயன்மிக்க கருத்துகளையும் முக்கிய ஆலோசனைகளையும் அவர் வழங்கினார்.


மார்க்க ஆசிரியர்களான உலமாக்கள் ஆற்ற வேண்டிய பங்கு, பணிகளை அவர் எடுத்துரைத்தார். அவர்களின் பணி பள்ளிவாசல்கள், மதரஸாக்களோடு சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. அந்த நடவடிக்கைகளுக்கும் அப்பால். பல நற்பணிகளை ஆற்றும் கடப்பாடு அவர்களுக்கு உண்டு. குறிப்பாக, சமூகத்தின் தலைமைத்துவப் பண்புகளில் அவர்கள் வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

சமூகத்தில் நிலவும் பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் மார்க்க அறிஞர்கள் துணைநிற்க வேண்டும் என்று ஹாஜி மசகோஸ் ஜுல்கிஃப்லி குறிப்பிட்டார்.

முஸ்லிம் சமுகத்தில் ஆலோசனையாளர்களின் தேவை அதிகரித்து வருகிறது. அதற்குரிய முக்கிய காரணங்களை உணர்ந்து செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. மூன்று முக்கிய காரணங்களைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அவை:

1. முஸ்லிம் சமூகத்திலுள்ள சீர்குலைந்த குடும்பங்களை நெறிப்படுத்தி அவற்றை மேம்படுத்த வேண்டும். அந்தப் பணியில் மார்க்க அறிஞர்கள் சிறந்த வழிகாட்டிகளாகப் பங்காற்ற வேண்டும்.

2. இளைய சமுதாயத்தின் நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். தடம் மாறிப்போகும் இளைஞர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும்.






3. சிறையிலுள்ளவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் மார்க்க அறிஞர்கள் பங்காற்ற வேண்டும். கைதிகளான அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை மார்க்க அறிஞர்கள் வழங்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்கு உதவ முடியும்.

## ஆலோசனைச் சேவைகள்

பட்டம் பெற்றவர்கள் சிங்கப்பூர் பள்ளிவாசல்களிலும் இஸ்லாமிய மார்க்கப் பள்ளிகளிலும் மேம்பாட்டுப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்று கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர்கனி தெரிவித்தார்.

பட்டம் பெற்ற மார்க்க அறிஞர்களான இவர்கள் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சவால்களைக் களையும் நெறிமுறைகளில் பயிற்சி பெற்றவர்கள். அதனால் குடும்ப நல்லுறவைக் கட்டிக்காக்கும் ஆலோசனைச் சேவைகளிலும் இவர்கள் ஈடுபடுவார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இணையத்தின் மூலம் இந்தியாவிலுள்ள மார்க்க ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு, கலந்துரையாடல் வழி சில முக்கிய பாடங்களை நடத்தவும் திட்டங்கள் உள்ளதாக கடையநல்லூர் முஸ்லிம் லீக் நிர்வாகம் தெரிவித்தது.

பட்டம் பெற்ற அனைவரும் மார்க்கக் கல்வி வாய்ப்பை வழங்கிய சங்கத்தை வெகுவாகப் பாராட்டினர். பட்டதாரிகளின் சார்பில் விழா மேடையில் பேசிய அப்துல் கபூர், தனது கல்வி அனுபவங்களை எடுத்துரைத்தார். வேலை பார்ப்பவர்கள் முறையான மார்க்கக் கல்வியைப் பெறுவதற்கு வசதியாக நேரங்கள் ஒதுக்கப்பட்டதை அவர் குறிப்பிட்டார்.

“வாரத்திற்கு மூன்று நாள், இரவு மணி 7.30 முதல் 10 மணி வரை வகுப்புகள் நடத்தப்பட்டன. அது எங்களுக்குப் பெரும் பயனைத் தந்தது. எங்கள் வேலைக்கும் குடும்பப் பணிகளுக்கும் பாட நேரம் ஏற்றதாக இருந்தது. எவ்வித தடையும் இல்லாமல் ஐந்து வருடம் முறையாக மார்க்கக் கல்வியைக் கற்றோம். பட்டம் பெற்றோம்” என்று மனநிறைவுடன் கூறினர், பட்டம் பெற்ற அப்துல் அஸீஸ் முஹம்மது(30) - ரஷீதா அப்துல் மஜீத்(22) தம்பதியர். பட்டம் பெறும் வாய்ப்பை வழங்கிய கடையநல்லூர் முஸ்லிம் லீகிற்கும், மதரஸா நல்லாசிரியர்களுக்கும் இவர்கள் நன்றி பாராட்டினர்.

“ஐந்து வருடப் பட்டக் கல்வியை உற்சாகத்துடன், ஊக்கத்துடன் படித்து முடித்தோம். எங்களின் அரபு மொழி ஆர்வமும், நமது சமூகத்திற்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணமும் தான் இதற்கு முக்கிய காரணம்” என்று இந்த தம்பதிகள் கூறினர்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகும், கடையநல்லூர் ஃபைஸுல் அன்வார் அரபிக் கல்லூரியும் ஒருங்கிணைந்து நடத்தும் மார்க்கக் கல்வி உள்ளூர் சமயத் தலைவர்களை உருவாக்கும் முன்னுதாரணமான பணி என்று அல்ஹாஜ் நசீர்கனி ‘நாடி’யிடம் தெரிவித்தார். மார்க்கப் பட்டக்கல்வி பயில்வோரின் எண்ணிக்கையை உயர்த்த மேம்பாட்டுத் திட்டங்களைச் சங்கம் மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

## சொற்பொழிவுகள்

பட்டமளிப்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஹிஜ்ரி புத்தாண்டை நினைவுகூரும் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெற்றன. கடையநல்லூர் ஃபைஸுல் அன்வார் அரபிக் கல்லூரியின் துணை முதல்வரும் பொதுச் செயலாளருமான மவ்லவி A.Y. முஹைதீன் அப்துல் காதிர் ஃபைஸி, தலைமை ஆசிரியர் ஹாஜி முஹம்மது இக்பால் ஃபைஸி ஆகியோர் உரையாற்றினர்.

# உன்னத சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் பத்து அம்சத் திட்டம்

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ் உன்னத சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் ரிஸாலா- பத்து அம்சத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஆக்ககரமான, முற்போக்கான சமுதாய நலத்திட்டம் அது. ஒட்டு மொத்த சிங்கப்பூர் முஸ்லிம்களின் சமய, சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்தி, அவர்களின் அடையாளத்தை நிலைபெறச் செய்வது பத்து அம்சத் திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

**பத்து அம்சங்கள் வருமாறு:**

* இஸ்லாமியக் கோட்பாடுகளை வலுவாகப் பின்பற்றும் வேளையில் சிங்கப்பூர் முஸ்லிம்கள் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் திறனையும் பெற வேண்டும்.

* ஆன்மீக, அறநெறிக் கோட்பாடுகளை வலுப்படுத்திக் கொண்டு புதிய சவால்களைச் சமாளிக்கும் திறனைப் பெற வேண்டும்.

* நவீன சூழ்நிலைகள், காலமாற்றப் போக்குகள், பழக்க வழக்கங்களுக்கு இடையிலும் இஸ்லாமிய நெறிமுறைகளை மிக உறுதியாகப் பேண வேண்டும்.

* தற்காலப் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்வதுடன் இஸ்லாமிய நாகரிகத்தையும் சரித்திரத்தையும் மதித்துப் போற்ற வேண்டும்.

* மற்ற நாகரிகங்களை மதிப்பதுடன் மற்ற சமூகங்களின் நற்பண்புகளை அறிந்து கொள்ள வேண்டும்.

* நல்ல முஸ்லிம்கள் நாட்டின் நல்ல குடிமக்களாகவும் திகழ வேண்டும்.

* பல இன-சமய சமுதாயம், சமயச் சார்பற்ற நாடு எனும் கண்ணோட்டத்திற்கு ஏற்ப பொறுப்புணர்வுடன் முஸ்லிம்கள் பங்காற்ற வேண்டும்.

* அனைவரின் நன்மதிப்புக்கும் உரியவர்களாக நாம் திகழ்ந்து அனைத்துலகக் கொள்கைகளை மேம்படுத்த வேண்டும்.

* இஸ்லாத்திற்கு முரண் இல்லாத வகையில் மற்றவர் நற்பண்புகளை மதித்து பன்முனைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

* மற்ற சமூகத்தினருக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும்.

இந்த இலக்கை அடையும் முயற்சியில் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் அமைப்புகள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

பத்து அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 26 பள்ளிவாசல்களில் தமிழ் மொழியில் இஸ்லாமிய சமயக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. முயிஸ், சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் சிறப்பு அம்சங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது. ‘ரிஸாலா’-உன்னதத்தை நோக்கி ஒரு பயணம் எனும் எண்பது பக்க நூல் அது.



# முயிஸ் வழங்கும் ஜகாத் உதவி




நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித் தொழுகுங்கள். ஜகாத்தும்-மார்க்க வரி-கொடுத்து வாருங்கள் என திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது. அது நமது மார்க்கக் கடமை. ஜகாத் எனும் தானங்களெல்லாம், ஏழைகளுக்கும், தானத்தை வசூலிப் பவர்களுக்கும், புதிதாக இஸ்லாத் தைத் தழுவியோருக்கும், அடிமைகளை விடுதலை செய் வதற்கும், கடனில் மூழ்கியவர் களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உரித்தானது என்பது அல்லாஹ் விதித்த கட்டளை என்றும் திருமறை விளக்குகிறது.

பொன்னையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அதனை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாதிருப்பவர்களுக்கு வேதனை உண்டு என்றும் அது எச்சரிக்கிறது.

ஜகாத் கடமையை சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ்-முறையாக நிறைவேற்றி வருகிறது. 2009இல் வசதி குறைந்த சுமார் ஈராயிரம் மலாய், முஸ்லிம் குடும்பங்களுக்கு $631,500 ஜகாத் உதவித் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1973 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு, வழக்கமாக வழங்கப்படும் உதவித் தொகையை விட கடந்த டிசம்பர் மாதம் கூடுதல் உதவியை முயிஸ் அளித்தது. இக்குடும்பங்கள் மாதந்தோறும் பெறும் 180 வெள்ளியை விட ஒன்றரை மடங்கு அதிகத் தொகையைப் பெற்றன.

பள்ளிக் கல்வி பயிலும் சிறார்களைக் கொண்ட வசதி குறைந்த 966 குடும்பங்களுக்கு மேலும் 210 வெள்ளி வழங்கப்பட்டதாக முயிஸ் தெரிவித்தது. பாடப் புத்தகங்கள் மற்றும் பள்ளிக்குத் தேவையான பொருட்களை பிள்ளைகள் வாங்கிக் கொள்வதற்கு உதவியாக இத்தொகை அளிக்கப்பட்டது. நான்கு பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 480 வெள்ளி போனஸ் தொகையாக வழங்கப்பட்டதாகவும் முயிஸ் கூறியது.

வசதி குறைந்த குடும்பங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு ஆவன செய்வது முக்கிய இலக்கு என்றும் இஸ்லாமிய சமய மன்றம் குறிப்பிட்டது.

சிங்கப்பூர் முஸ்லிம்கள் தங்கள் சேமிப்பிலிருந்து ஜகாத் வழங்குவது குறித்த கையேடுகளை முயிஸ் வெளியிட்டுள்ளது.

சமூகத்தை பலப்படுத்த ஜகாத் கடமையை நிறைவேற்றுங்கள் என வலியுறுத்தும் கையேட்டில், மத்திய சேமநிதி, தங்கம், முதலீடு, காப்புறுதி, பங்கு வர்த்தகம், வணிகம் மற்றும் சேமிப்புகளின் அடிப்படையில் ஜகாத் தொகை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜகாத் உதவித் தொகையை வசதியற்ற 8 வகையினருக்கு வழங்கலாம். அவர்களின் பட்டியலும், ஜகாத் தொகையை வசூலிக்கும் மையங்களின் முகவரியும் கையேட்டில் இடம் பெற்றுள்ளன.

# மலபார் பள்ளிவாசல் சீரமைப்புப் பணிக்கு ஆதரவு வழங்கியவர்களுக்குப் பாராட்டு

விக்டோரியா ஸ்ட்ரீட்டில் உள்ள மலபார் பள்ளிவாசல் மறுசீரமைப்புப் பணிகளுக்குப் பிறகு புதுப்பொலிவு பெற்றிருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாக்கப்பட்ட இப் பள்ளிவாசலின் பல கட்ட வளர்ச்சியை சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் நன்கு அறியும். 1956ஆம் ஆண்டில் அன்றைய அரசநாயகர் - யாங் டி பெர்த்துவான் நெகாரா- யூசுப் பின் இஷாக் பள்ளிவாசலைத் திறந்து வைத்தார்.

பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் தலைவர் உஸ்மான் அப்துல்லா, தமது வரவேற்புரையில் மலபார் மஸ்ஜிதின் பல கட்ட மறுசீரமைப்புப் பணிகளை எடுத்துரைத்தார்.

மலபார் முஸ்லிம் ஜமாஅத்தின் முயற்சியினால் 1963ஆம் ஆண்டில் இப் பள்ளிவாசல் மறுநிர்மாணம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு 1980களில் ஒரு கட்டமாகவும், 1990களில் இரண்டாவது கட்டமாகவும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பல புரவலர்கள் அந்த நற்பணிக்கு ஆதரவு வழங்கினர்.

புதுப்பிப்புப் பணிக்குத் தேவைப்பட்ட சுமார் 150,000 வெள்ளியில் 125,000 வெள்ளி நன்கொடையாகக் கிடைத்தது. உதவி வழங்கியவர்களுக்கு நன்றி பாராட்டும் நிகழ்ச்சி கடந்த 10.1.2010 மதியத் தொழுகைக்குப் பிறகு இப்பள்ளிவாசலில் நடைபெற்றது.

சிங்கப்பூர் தலைமை முஃப்தி ஹாஜி சையது ஈஸா அல் சமைத் நல்லாசி உரை வழங்கினார். பள்ளிவாசலின் நற்பணிகள் நாளும் தொடர அவர் துஆ இறைஞ்சினார். வெளியுறவு மூத்த துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மலபார் பள்ளிவாசலுக்கும் தமக்கும் உள்ள நீண்டகாலப் பிணைப்புகளை அவர் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்தார். தொழுகை, நோன்பு திறப்பு, உபசரிப்பு நிகழ்ச்சிகளில் அவ்வப்போது கலந்து கொண்டது மறக்கமுடியாத அனுபவம். குறிப்பாக, முயிஸ் தலைவராகத் தாம் இருந்தபோது தொடர்பு




அதிகம் என்று கூறினார். இப் பள்ளிவாசலின் முன்னைய இமாம் மவுலானா அபூபக்கர் அவர்களின் சேவையையும், மஸ்ஜித் நிர்வாகிகளின் நற்பணிகளையும் மறக்க முடியாது. மலபார் முஸ்லிம் சமூகம் தலைமைத்துவச் சிறப்பும், பன்முனைத் திறனும், சேவை மனப்பான்மையும் வாய்ந்தது. அதற்கு எடுத்துக்காட்டாக, இளைய சமுதாயத்தின் கல்வி, வேலைவாய்ப்புத் திறன் மேம்பாட்டுக்கு பள்ளிவாசல் நிர்வாகம் பாடுபட்டு வருகிறது. காலத்தின் தேவைக்கேற்ப மார்க்க சொற்பொழிவுகள், கேம்ப் ஷுக்கூர் இளையர் முகாம், இஃப்தார், குர்பானி வசதிகள், விருதுகள் முதலான சமூக சேவைகளை வழங்கிவருவது பாராட்டுக்குரியது என்றார்.

கணிசமான நன்கொடை வழங்கிய அல்ஹாஜ் எஸ்.எம்.அப்துல் ஜலீல் உள்ளிட்ட புரவலர்களுக்கு பள்ளிவாசலின் சார்பில் அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

விருந்துபசரிப்புடன் நன்றி பாராட்டும் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



# PHOTO NEWS

# படச் செய்திகள்



Visitors from the Teaching Institute of Tuanku Bainun, Pulau Pinang at SIH 22 Dec 2009



Zikral Hijrah celebrations 1431H at Darussalam Mosque 17 Dec 2009



SIES (Singapore Islamic Education System) Seminar 09 at SIH 14 Nov 2009




Seminar & Book Launch of Muslim Reform in SEA at Harmony Centre 31 Oct 2009





aLIVE Fiesta 09 at Darul Aman 25 Oct 2009



41st Mosque Council Meeting at Assyakirin Mosque 24 Oct 2009




Cheque presentation in support of Mercy Relief's Humanitarian efforts at Muhajirin Mosque 23 Oct 2009



Hari Raya gathering and Fatwa briefing with Asatizah at SIH 10 Oct 2009

# முன்னோடி எம்.கே.பக்ருத்தீன் சாஹிப்

பேனா முனையால் பெரும்புகழ் ஈட்டிய
பெரியவர் பகுருத்தீன் - மனம்
தேனாய் இனிக்கத் தென்றலாப் பேசும்
திருவினர் பகுருத்தீன்

விழாக்கள் யாவும் விழாமல் நடக்க
விரைபவர் பகுருத்தீன் - கவிக்
குழாத்தின் மீது குறையா நேசம்
கொண்டவர் பகுருத்தீன்!

ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பாலின் நெடிய கவிதையின் சில வரிகள் இவை. பேனா முனை இதழை நடத்திய ஆசிரியர், கவிஞர், கதாசிரியர், மேடைப் பேச்சாளர், சமூகத் தலைவர் எம்.கே.பக்ருத்தீன் சாஹிப் அவர்களை நமது மூத்த தலைமுறையினர் அறிவர். அவர் ஆற்றிய நற்பணிகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

மலாயா நண்பன், தமிழ் முரசு முதலான இதழ்களிலும் அவர் சிறுகதை, கவிதைகளை இயற்பெயரிலும் புனைப்பெயரிலும் எழுதி வந்தார். மகோபன், மக்காய் மகோபன், பன்சாப் ஆகியவை புனைப்பெயர்கள்.

காதலர் உள்ளம், கதிஜாவின் காதல் சிறுகதைகள் மறக்க முடியாதவை. தமிழ் முரசில் 1950களில் அவை இடம்பெற்றன.

பேனா முனையினால் அறுபது ஆண்டுகளுக்குமுன் பிரபலமடைந்த எம்.கே.பக்ருத்தீன், தக்கலை மக்காயில் 2.11.1907ல் பிறந்தார். இளமையிலேயே சிங்கப்பூருக்கு வந்து எழுத்து, இலக்கியத் துறையிலும், சமூகப் பணியிலும் ஈடுபட்டார். உணவுக் கடைகளையும் நடத்தினார்.

## பேனா முனை

பேனா முனை 1946ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதில் சிறுகதை, கவிதை, கட்டுரைகளை எழுதிய ஆசிரியர் பக்ருத்தீன் சாஹிப், பல எழுத்தாளர்களை உருவாக்கினார். மாதம் இருமுறை வெளிவந்த பேனாமுனை மூன்றாண்டு காலம் பெயர் பதித்தது.



1945 முதல் 1947 வரை வெளிவந்த அறிவுப்பேரிகை இதழுடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார். தக்கலை முஸ்லிம் சங்கத்தினர் அந்த இதழை நடத்தினர்.

## நற்பணிகள்

சிங்கப்பூரில் 1939ல் தொடங்கப்பட்ட தக்கலை முஸ்லிம் அசோசியேஷன்-சங்கத்தில் பக்ருத்தீன் சாஹிப் நீண்ட காலம் பங்காற்றினார். சமுதாய முன்னேற்றம், ஏழை மாணவர்களுக்கும் இளம்பெண்களுக்கும் நிதியுதவி, வணிக முயற்சியில் ஈடுபடுவோருக்கு உதவி, பீரப்பா இலக்கிய மலருக்கான உதவி என பல நற்பணிகளுக்கு இச்சங்கம் ஆதரவு வழங்கிவந்தது.

சிங்கப்பூரில் 1952ம் ஆண்டில் தொடங்கப்பட்ட திருவிதாங்கோடு முஸ்லிம் யூனியன்-சங்கத்திலும் பக்ருத்தீன் சாஹிப் இடம் பெற்றிருந்தார். நூற்றுக்கு மேற்பட்ட அச் சங்கத்தின் தொடக்ககால உறுப்பினர்களில் ஒருவர் அவர்.

எம்.கே.பக்ருத்தீன் சாஹிப், மலாயா நண்பன் ஆசிரியர் கரீம்கனியின் நெருங்கிய ஆதரவாளராக இருந்து வந்தார். மலாயா நண்பன் இதழின் மூத்த ஆசிரியர் குழுவினர் அனைவரின் நல்லன்பையும் பெற்றிருந்தார்.

சிங்கப்பூருக்கு 1950-60களில் வருகையளித்த அறிஞர் பெருமக்களை சங்கத்தின் சார்பில் வரவேற்பதில் பக்ருத்தீன் சாஹிப் முக்கிய பங்கு வகித்தார். காயிதெ மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாஹிப், புதுக்கல்லூரியின் அன்றைய செயலாளர் எம்.எஸ்.ஏ.மஜீத் பி.ஏ., முஸ்லிம் முரசு நிறுவனர் எஸ்.ஏ.ரஹீம், பேராசிரியர் கா.அப்துல் கபூர், மணிவிளக்கு ஆசிரியர் ஆ.கா.அ.அப்துஸ் ஸமது முதலானோரை வரவேற்றுச் சிறப்பித்தார் அவர்.

### பொறுப்புகள்

தமிழர் பேரவையின் துணைத் தலைவராக பல ஆண்டுகள் பொறுப்பு வகித்தார் பக்ருத்தீன் சாஹிப்.

தமிழ் முஸ்லிம் ஜமாஅத்தின் கலாசார செயலாளராக 1970களில் விளங்கிய அவர், அதன் வெள்ளி விழா மலரை தொகுத்து வெளியிட்டார். தமிழ் முஸ்லிம் ஜமாஅத் தகவல் மடல் 1984 நோன்புப் பெருநாள் மலர் முதலானவற்றையும் வெளியிட்டு வழங்கினார்.

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பக்ருத்தீன் சாஹிப் அங்கம் வகித்தார். 1975 முதல் சில ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராக இருந்தார். 1983 முதல் 1985 வரை மீண்டும் செயலவை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

தமிழ் முரசு ஆசிரியர் தமிழவேள் கோ.சாரங்கபாணியுடன் பக்ருத்தீன் சாஹிபுக்கு அணுக்கமான பிணைப்பு. அவர் தலைவராக இருந்த சங்கங்களில் இவர் துணைத் தலைவர், அல்லது ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்தார். அந்த அளவுக்கு இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

இலக்கியப் படைப்பாளர், மேடைப் பேச்சாளர் பக்ருத்தீன் சாஹிப் கைதேர்ந்த சமையல்காரர். சிங்கப்பூரின் சில பகுதிகளில் பல ஆண்டுகள் உணவுக் கடைகளை நடத்தினார். பாசிர் பாஞ்சாங்கில் ஸ்டார் லைட் திரைப்பட அரங்குக்கு அருகிலும், புக்கிட் பெர்மாய் ரயில் நிலையத்திற்கு அருகிலும் எல்லா உணவு வகைகளையும் விற்பனை செய்துவந்தார். அந்தத் தொழிலில் உழைத்த அளவுக்கு அவர் ஊதியம் திரட்டவில்லை.

முதுமை காரணமாக 1980களின் பிற்பகுதியில் தக்கலை மக்காய்க்குத் திரும்பிய பக்ருத்தீன் சாஹிப் 14.10.1993 அன்று காலமானார்.

முன்னோடி பக்ருத்தீன் சாஹிப் அவர்களின் இலக்கியப் படைப்புகள் கிடைப்பது அரிதாகிவிட்டது. சில சிறுகதைகள், லியாக்கத் மறைந்தார் (1951-அன்றைய பாகிஸ்தான் பிரதமர்) போன்ற ஒரிரு கவிதைகள் மட்டுமே கிடைக்கின்றன.

- ஜே.எம்.எஸ்.

# ஹிஜ்ரி புத்தாண்டு 1431

ஹிஜ்ரி ஆண்டு வரலாற்று மாண்பும் மகத்துவமும் வாய்ந்தது. அண்ணல் நபிகளார்(ஸல்) அவர்களே ஹிஜ்ரி நாயகர் என்பது உலகறிந்த வரலாறு. அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணமே இந்த ஆண்டுக் கணக்குக்கு ஆதாரமாக அமைந்தது.

நபிமணி(ஸல்) அவர்கள் இறைவனின் கட்டளையை ஏற்று, பிறந்த ஊரான திருமக்காவை விட்டு மதீனாவுக்குச் சென்ற வரலாறு ஒரு தியாகக் காவியம். ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணமாவதை, இடம் பெயர்வதைக் குறிக்கும் அரபு மொழிச் சொல்லே ஹிஜ்ரத் ஆகும். நபி பெருமானார்(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு இடப்பெயர்ச்சி செய்த காலக் கணக்கின் அடிப்படையில் ஹிஜ்ரி ஆண்டை அமைக்க சஹாபாக்கள்-நபி தோழர்கள்-உடன்பாடு கண்டனர். அதன்படி ஈசவி-கி.பி. 662 ஜுன் 28 திங்கட்கிழமை ஹிஜ்ரி ஆண்டு தொடங்கியது. இஸ்லாமிய ஆண்டுக்கு ஹிஜ்ரி எனப் பெயர் சூட்டியவர் கலீபா உமர்(ரலி) அவர்கள்.

பிறைக்கணக்கு ஆண்டான ஹிஜ்ரியின் முதல் மாதமே முஹர்ரம். அரும் பெரும் சிறப்புகளைக் கொண்ட இந்த அவ்வல் முஹர்ரம் வேண்டாதவற்றை, தடுக்கப் பட்டவைகளை, தீயவற்றை விலக்கிவைப்பது, அவற்றிலிருந்து விலகியிருப்பது புனிதமான கடமை என்பதை வலியுறுத்துகிறது. தீமைகளிலிருந்து மக்கள் விலகியிருக்க வேண்டும் என்பதே முஹர்ரம் வழங்கும் செய்தி.

# எழுத்தாளர் ஜே.எம்.சாலியின் நூல் வெளியீட்டு விழா

தமிழ் முரசு, ஆனந்தவிகடன் முன்னாள் துணை ஆசிரியரும், சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகம் (SBC), சிங்கப்பூர் தொலைக்காட்சிக் கழகம் (TCS) ஆகியவற்றின் முன்னைய மூத்த செய்தி ஆசிரியருமான ஜே.எம்.சாலியின் நூல்கள் 29.11.2009 அன்று சென்னையில் வெளியிடப்பட்டன.

இலக்கிய இதழியல் முன்னோடிகள், தமிழகத்து தர்காக்கள், அண்ணாவின் மீலாது விழா சொற்பொழிவுகள் ஆகிய நூல்களையும், அவருடைய தமையனார் 1950களில் எழுதிய இக்பால் யார் நூலின் மறுபதிப்பான மகாகவி அல்லாமா இக்பாலையும் தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் வெளியிட்டார்.

சமநிலைச் சமுதாயப் பதிப்பகத்தின் ஏற்பாட்டில் அல்ஹாஜ் ஏ.வி.எம்.ஜாபர்தீன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழக முன்னாள் அமைச்சர் ரஹ்மான் கான், எழுத்தாளர் தோப்பில் முகம்மது மீரான், அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், சென்னை கம்பன் கழகச் செயலாளர் இலக்கிய வீதி இனியவன் ஆகியோர் ஜே.எம்.சாலியின் எழுத்துலகப் பணி குறித்து வாழ்த்துரை வழங்கினர்.

சிலம்பொலி செல்லப்பன், ஈரோடு தமிழன்பன், பேராசிரியர் சே.மு.மு.முகமது அலி, கோவை அ.அப்துல் அஜீஸ் பாகவி ஆகியோர் நூல் ஆய்வுரைகளை வழங்கினர்.

இஸ்லாமியச் சமுதாயம் தமிழோடு பிறந்து, தமிழோடு வளர்ந்து, தமிழுக்காக தொடர்ந்து சேவையாற்றி வருகிற ஒரு சிறந்த சமுதாயம் என்பதை நீண்ட நாட்களாகவே நான் உணர்ந்து வருகிறேன் என்ற முத்திரையுடன் உரையைத் தொடங்கினார், அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன்.

“ஜே.எம்.சாலியின் குடும்பமே தமிழ் உணர்வாளர்கள் நிரம்பிய குடும்பமாக உள்ளது. அவரது உடன்பிறப்புகள் எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் உள்ளனர். அவர்கள் தொடர்ந்து தமிழுக்குப் பல நல்ல பணிகளை ஆற்றி யிருக்கிறார்கள்.”

அந்த வரிசையில் திரு. சாலி எழுதிய இலக்கிய இதழியல் முன்னோடிகள் என்ற நூல், தமிழுக்குச் சேவையாற்றியவர்கள் குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகிற நூலாகும்.



இந்நூலின் இரண்டாம் பாகமும் விரைவில் வெளிவர உள்ளது. இன்னொரு நூல் ‘தமிழகத்து தர்காக்கள்’ என்ற நூல். இவ்விரு நூல்களும் தமிழகத்தில் இஸ்லாமியச் சமுதாயம் பற்றி அறிந்துகொள்ள நினைக்கிற எவருக்கும் தேவையான விளக்கத்தைத் தருகிற நூல்களாகும். ஏறத்தாழ 150 வருடத்திற்கு முன்பே இஸ்லாமியச் சமுதாயத்தில் எழுத்தாளர்களாக விளங்கி வந்தவர்கள் பற்றியெல்லாம் அறிந்து கொள்ளக் கூடிய வகையில், அதிலும், தமிழ் மொழிக்குச் சிறப்பான சேவையாற்றிய பலரையும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இந்த இலக்கிய இதழியல் முன்னோடிகள் நூல் அமைந்துள்ளது.

“...மிகப் பெரிய எழுத்தாளர்களாக தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கிய அவர்களில் பலரும், மார்க்கத்தையும் தமிழ் உணர்வையும் சேர்த்து வளர்த்தார்கள் என்பதை அறிந்து நான் பாராட்ட விரும்புகிறேன். குறிப்பாக, ‘இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி’ என்று சொல்கிற அளவுக்கு மொழிப்பற்றுடன் இஸ்லாத்தை இணைத்து எழுதியது, தமிழ் நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலையை, பக்குவத்தை ஏற்படுத்தியது..” என்று விரிவான உரையை அமைச்சர் தொடர்ந்தார்.

கவிஞர் அல்லாமா இக்பால் நூலின் இலக்கியச் சுவைகளையும் அவர் எடுத்துரைத்தார். “இந்நூல்களை நீங்களும் வாங்கிப்படித்து, நூலாசிரியரின் தமிழ்ப் பணிக்கு ஆதரவு அளிக்க

வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவரை வாழ்த்தி விடை பெறுகிறேன்" என உரையை நிறைவு செய்தார் அமைச்சர்.

இலக்கிய இதழியல் முன்னோடிகள் முதல் தொகுதியில், பினாங்கில் 19ஆம் நூற்றாண்டில் பத்திரிகை நடத்திய நாகூர் குலாம் காதிர் நாவலர், சிங்கையில் 1880களில் பத்திரிகையும் அச்சகமும் நடத்திய மகுதூம் சாகிபு, மலாயா நண்பன் ஆசிரியர் மு.கரீம் கனி, முதல் பெண் எழுத்தாளர் நாகூர் சித்தி ஜுனைதா பேகம் உள்ளிட்ட 30 முன்னோடிகள் இடம் பெற்றுள்ளனர்.

தமிழகத்து தர்காக்கள் நூலில், நாகூர் தர்கா முதல் ஏறத்தாழ 150 தர்காக்கள் குறித்த அரிய செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

மீலாது விழாக்களில் அறிஞர் அண்ணா நிகழ்த்திய பல உரைகளின் தொகுப்பே 'அண்ணாவின் மீலாது விழா சொற்பொழிவுகள்'.



# தென்காசி முஸ்லிம் சங்கத்தின் பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சி

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் 22.11.2009 ஞாயிற்றுக்கிழமை பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தியது. சிங்கப்பூர் ஜாமியா இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு தொடங்கிய இந்நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவர் ஹாஜி ஷேக் மைதீன் அவர்கள் தலைமை வகித்தார். நம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சமுதாயத்தின் பங்கு மிக்க அவசியம் என தலைமையுரையில் அவர் வலியுறுத்தினார். அதன் தொடர்பில் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ஆற்றிவரும் பணிகளை அவர் குறிப்பிட்டார். சங்கம் நடத்திவரும் மத்ரஸா நூருல் இஸ்லாம் அவற்றில் ஒன்று. அதில் பயின்று வரும் மாணவர் இம்ரான் கிராஅத் ஓதினார்.

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹாஜி பஹ்ருதீன் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். சமுதாய அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அதற்கு முன்னுரிமை அளிப்பது நமது சங்கங்களின் முக்கிய கடமை என அவர் கூறினார்.

சிங்கப்பூர் ஜாமியாவின் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன், தமிழ் முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜி ஹாஜா பஹ்ருதீன், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி நசீர்கனி உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்களும், ஹனீபா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் முஹம்மது ஹனீபா முதலான வணிகப் பிரமுகர்களும் நிகழ்ச்சிக்கு வருகையளித்துச் சிறப்பித்தனர்.



உரைநிகழ்ச்சியைத் தொடர்ந்து சிறப்பான மதிய விருந்துபசரிப்பு நடைபெற்றது. சங்கத்தின் உஸ்தாத் மவ்லவி ஹாபிஸ் அசன் அலி பைஜி அவர்களின் துஆவுடன் பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

# மஸ்ஜித் பென்கூலனில்
# கேம்ப் பிளஸ்ஸிங்ஸ்-5 நிறைவு விழா

மஸ்ஜித் பென்கூலனில் ஆண்டுதோறும் இரு நீண்ட பள்ளிவிடுமுறைக் காலங்களிலும் கேம்ப் பிளஸ்ஸிங்ஸ் (விடுமுறைக்கால வகுப்புகள்) நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு வகுப்புக்கள் 16.11.2009 முதல் தொடங்கி 24.12.2009 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

கேம்ப் பிளஸ்ஸிங்ஸ்-5ல் மொத்தமாக 40 மாணவர்களும், 25 மாணவிகளும் பயின்றனர்.

மார்க்கக் கல்வியுடன், கணிதம் ஆங்கிலப் பாடங்களில் சிறப்புப் பயிற்சி, இஸ்லாமிய சமய மன்றம் முயிஸின் 'டீன் அலைவ்' சிறப்புப் பயிற்சி, மற்றும் சிங்கப்பூர் சட்ட அமைச்சின் சமூக சமரச மன்ற உதவி மேலாளர் மேடம் சுலைகா பீ அவர்களின் தன்முனைப்பு உரை போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிறைவு விழா மஸ்ஜித் பென்கூலன் பன்னோக்கு மண்டபத்தில் 24.12.2009 காலை 10 மணிக்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜி ஹாஜா பஹ்ருத்தீன், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் பொதுச் செயலாளர் ஹாஜி மு.அ.மசூது, ஜாமியா சிங்கப்பூரின் உதவித்தலைவர் ஹாஜி எச்.எம்.சலீம், ஜாமியாவின் மூத்த அதிகாரிகள், மஸ்ஜித் நிர்வாகக் குழு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், பெற்றோர்கள் திரளாகக் கலந்து சிறப்பித்தனர்.

மஸ்ஜித் நிர்வாகக் குழுத் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம்.அப்துல் ஜலீல் P.B.B. உதவித்தலைவர் ஹாஜி எம்.ஒய்.முஹம்மது ரபீக் முன்னிலையில்





ஜாமியா சிங்கப்பூரின் கல்வித்துறைத் தலைவர் டாக்டர் முஹம்மது ஹஸ்பி D.B.A. அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொண்டு மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார்.

பள்ளியின் இமாம் அப்துல் கையூம் ஆலிம் அவர்கள் பெற்றோர்-பிள்ளைகளின் கடமைகள் பற்றி உரை நிகழ்த்தினார்.

மாணவ மாணவிகளின் கிராஅத், ஹதீஸ், பாடல்கள், உரையாடல்கள், மற்றும் நாடகங்கள் அனைவரையும் பரவசப் படுத்தின.

பள்ளியின் உஸ்தாத் ஜியாவுத்தீன் ஆலிம் அவர்களின் துஆவுடன் விழா நிறைவு பெற்றது.

லுஹர் தொழுகைக்குப் பின் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இன்ஷா அல்லாஹ் வருகிற ஜூன் மாதம் நடைபெறவுள்ள கேம்ப் பிளஸ்ஸிங்ஸ்-5க்கு தங்களின் மேலான கருத்துக்களை Masjid Bencoolen - 6333 3016 தொலைபேசி எண்ணுக்குத் தெரிவிக்குமாறு, மஸ்ஜித் நிர்வாகம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

## மீலாதுப் பெருவிழா

இன்ஷா அல்லாஹ், பென்கூலன் பள்ளிவாசலில் காசுக்கடை சகோதரர்கள் 21-02-2010 காலை 10 மணிக்கு நடத்தும் மீலாது பெருவிழாவுக்கு அனைவரும் திரண்டு வருமாறு, மஸ்ஜித் நிர்வாகம் அழைக்கிறது. பெண்களுக்கு தனியிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. லுஹர் தொழுகைக்குப் பின் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்.